சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணி – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் சார்நிலைப் பணியில் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர்களாகப் பணியாற்றும் அலுவலர்களின் முதுநிலையினை மாநில அளவில் மாற்றம் செய்ததையொட்டி, தகுதியுள்ளவர்களை பணி மாறுதல் மூலம் (Recruitment by Transfer) மாநிலப் பணியில் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்களாக நியமனம் செய்ய 2009–10ம் ஆண்டிற்கான தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் சேர்த்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை

அரசாணை (ப) எண்.43 நாள் 27.01.2010

படிக்க:

1. அரசாணை (டி) எண்.480, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை, நாள் 5.8.08.
2. அரசாணை (4டி) எண்.6, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை, நாள் 29.10.09.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் கடிதஎண்.61312/09/ ஜிஇ2.1, 20.11.09 மற்றும் 4.1.2010.

-------

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2009–10ஆம் ஆண்டிற்கு பணிமாற்று முறை மூலமான நியமனத்திற்கான ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலை பதவியில் ஏற்படப்போகும் காலியிடங்கள் மதிப்பீடு நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 72 வட்டார வளர்ச்சி அலுவலர்களை, ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்களாகப் பதவி உயர்வு அளிக்கும்பொருட்டு மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 2009–10ம் ஆண்டுக்கான ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் பதவிக்கான தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டது.

2. ஊரக வளர்ச்சி சார்நிலைப் பணி விதிகளின்கீழ் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் கீழ்நிலைப் பணிகளில் வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிபவர்களுக்கிடையே முதுநிலை நிர்ணயம் செய்வது தொடர்பாக சில வழக்குகள் நிலுவையில் இருந்த காரணத்தினால் மேற்காணும் மாவட்டங்களில் பணிபுரியும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கிடையே மாநில அளவிலான முதுநிலைப் பட்டியல் அறுதியிடப்படவில்லை. அவ்வழக்கினைத் தொடுத்தவர்களில் ஒரு பகுதியினர் அவ்வழக்கினைத் திரும்பப் பெற்றுக் கொண்டதால் அவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக உச்ச நீதி மன்றம் தனது 24.8.09 நாளிட்ட தீர்ப்பில் ஆணையிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து வழக்கு ஏதும் நிலுவையில் இல்லாத காரணத்தினால் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் பணிபுரியும் வட்டார வளர்ச்சி அலுவலர்களின் முதுநிலையினை 2003, 2004, 2005 மற்றும் 2006ம் ஆண்டுகளுக்கான மாநில அளவிலான முதுநிலைப் பட்டியலில் சேர்க்க அவ்விரு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்துரு அனுப்பியதன் அடிப்படையில் அவர்களது முதுநிலையினை நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளதாகவும், மேலும் மற்ற மாவட்டங்களில் இவர்களைவிடப் பணியில்

இளையவர்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்களுக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் இடம்பெற்றுவிட்டதால் தற்போது திருத்தியமைக்கப்பட்ட முதுநிலைப் பட்டியலில் உள்ள 17 வட்டார வளர்ச்சி அலுவலர்களின் பெயரினை கருதிப் பார்த்து, தகுதி வாய்ந்த நபர்களை ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் பணியிடத்திற்கான 2009–10ம் ஆண்டிற்கான தற்காலிகத் தேர்தோர் பெயர்ப் பட்டியலில் சேர்க்க மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்து, கீழ்க்காணும் 14 வட்டார வளர்ச்சி அலுவலர்களின் பெயர்களை மாநில அளவிலான பணிமூப்பினை அடிப்படையாகக் கொண்டு, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட 2009–10ம் ஆண்டுக்கான ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் உரிய இடங்களில் கீழ்க்கண்டவாறு சேர்த்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | அரசாணையின்படி திருத்திய வரிசை எண். | பணிமூப்பு எண் | ஏற்கனவே தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் இடம்பெற்றவர்கள் | தற்போது தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்படும் அலுவலர்கள் | தற்போது தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்படும் அலுவலர்களின் பணித் தகுதி |
|---|---|---|---|---|---|
| – | **1.** | **2687** | **எஸ்.கண்ணன்** | – | – |
| 1 | 1(எ) | 2973(எ) | | டி.சீனிவாசன் | இல்லை |
| 2 | 1(பி) | 3044(எ) | | எஸ்.பழனி | உண்டு |
| – | **2.** | **3051** | **பி.இளங்கோவன்** | – | – |
| – | **3.** | **3109** | **கே.அன்பழகன்** | – | - |
| 3 | 3(எ) | 3111(எ) | | ஏ.அம்ஜதுல் ஹுசேன் | உண்டு |
| 4 | 3(பி) | 3124(எ) | | வி.கே.நரசிம்மன் | உண்டு |
| – | **4.** | **3149** | **எஸ்.சூரியகலா** | – | – |
| – | **5.** | **3153** | **டி.பன்னீர்செல்வம்** | – | – |
| 5 | 5(எ) | 3153(எ) | | கே.எம்.சுப்பிரமணியன் | இல்லை |
| 6 | 5(பி) | 3164(எ) | | எஸ்.சிவகுமார் | உண்டு |
| 7 | 5(சி) | 3175(எ) | | கே.எம்.ரகுராமன் | உண்டு |
| 8 | 5(டி) | 3223(எ) | | சி.கே.சுந்தரராஜன் | உண்டு |
| 9 | 5(இ) | 3223(பி) | | டி.ஜெயராமன் | உண்டு |
| 10 | 5(எப்) | 3228(எ) | | ஆர்.பாபு | உண்டு |
| 11 | 5(ஜி) | 3228(சி) | | கே.சின்னன் | இல்லை |
| 12 | 5(எச்) | 3258(எ) | | எம்.ஐயப்பன் | இல்லை |
| – | **6.** | **3292** | **என்.தருமு** | – | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **–** | **44.** | **3466** | **எம்.வசந்தா** | – | – |
| 13 | 44(ஏ) | 3467(ஏ) | | டி.ஸ்ரீதர் | இல்லை |
| **–** | **45.** | **3468** | **எ.தியாகராஜன்** | – | – |
| **–** | **60.** | **3514** | **பி.வீரவீரன்** | – | – |
| 14 | 60(ஏ) | 3514(பி) | | ஜி.நடராஜன் | இல்லை |
| **–** | **61.** | **3519** | **எஸ்.ஏசு சகாயம்** | – | – |

மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட 2009–10ம் ஆண்டுக்கான ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் மேற்கண்டவாறு சேர்க்கப்பட்டவர்களில் திரு.டி.சீனிவாசன்(2973ஏ), திரு.கே.எம்.சுப்ரமணியன் (3153ஏ), திரு.கே.சின்னன்(3228சி), திரு.எம்.ஐயப்பன்(3258ஏ), திரு.டி.ஸ்ரீதர்(3467ஏ) மற்றும் திரு.ஜி.நடராஜன்(3514பி) ஆகியோர்கள் ஏற்கனவே வட்டார வளர்ச்சி அலுவலர் நிலைப் பணியிடங்களில் இரண்டு ஆண்டுகாலத்திற்குமேல் பணிபுரிந்து வந்தாலும், ஊரக வளர்ச்சி பணி சிறப்பு விதிகளில், விதி 3க்கு அரசாணை(நிலை) எண்.94, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை, நாள் 6.6.08ல் வெளியிடப்பட்ட திருத்தங்களின்படி, ஓராண்டு காலத்திற்குக் குறையாமல் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) மற்றும் ஓராண்டு காலத்திற்கு குறையாமல் வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி)ஆகப் பணியாற்ற வேண்டும் என்பதில் முழுமையாகப் பணித் தகுதி பெற்றிருக்கவில்லையாதலால், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் அவர்கள் பெயரைச் சேர்க்க ஏதுவாக அவர்கள் சார்பாக 1987ம் ஆண்டு தமிழ்நாடு பணிகள் நடைமுறை நூலின் முதல் தொகுதியில் பகுதி இரண்டில் உள்ள தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 48ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தமிழ்நாடு ஊரக வளர்ச்சிப் பணி சிறப்பு விதிகளில் விதி 3ஐ தளர்த்தி தமிழக ஆளுநர் அவர்கள் ஆணையிடுகிறார்கள்.–

4. மேலே பத்தி 3இல், 2009–10ம் ஆண்டுக்கான ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் தற்காலிகத் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலில் உரிய இடங்களில் சேர்க்கப்பட்டுள்ள நபர்களுக்கு எதிராக தமிழ்நாடு குடிமை பணிகள் (ஒழுங்கு (ம) மேல்முறையீடு) விதிகளின் விதி 17(பி)ன்கீழ்/குற்றவியல்/விழிப்புப்பணி/ஒழுங்கு நடவடிக்கை ஆணையரால் ஏற்படுத்தப்பட்ட எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லையெனவும்/தண்டனை எதுவும் வழங்கப்படவில்லை என்பதையும், அவர்களுக்கு எதிரான குறைக்குறிப்புரைகள் (adverse remarks) ஏதுமில்லை என்பதையும், தற்காலி பணிநீக்கம் செய்யப்படவில்லை என்பதையும் உறுதி செய்த பின்னர் பதவி உயர்வு அளிக்க செயற்குறிப்புகள் அனுப்பவேண்டுமெனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்
<u>வழி</u> ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காஞ்சிபுரம்/திருவள்ளூர்.

மாவட்ட கரூவூல அலுவலர்கள், காஞ்சிபுரம்/திருவள்ளூர்.
<u>நகல்</u>
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை –9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், ஊ.வ.(ம)ஊ.துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்